தலைக்கானிகுப்பத்தில் புதிய ஏரி

*438 வினா—திரு. ந. முத்துவேல்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வானூர் தொகுதியில் தலைக்கானிகுப்பம் கிராமத்தில் புதிய ஏரி கட்டுவதற்காக அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) ஆம். ரூ. 1-05 லட்சத்திற்கான மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளது.

Vermiculite deposits in Thiruppathur

* 439 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state the progress made so far in the implementation of the scheme taken up by the Geology Branch formed under Industries and Commerce Department for mining and processing of Vermiculite in Tiruppathur taluk in North Arcot district?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: 1972 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் சுரங்கத்தில் முறையான உற்பத்தி தொடங்கப் பெற்று சுமார் 800 டன் நீர் அபிரகப்படிவம் வெட்டியெடுக்கப்பட்டு தாம் வாரியாகப் பிரித்து சேர்த்து வைக்கப்பட்டுள்ளது. நீர் அபிரகப்பட்டைத் தொழிற்சாலை, அதற்கு வேண்டிய எல்லா இயந்திரங்களுடன் 1973-ம் ஆண்டு மத்தியில் அம்பத்தூரில் நிறுவப்பட்டது. இத்தொழிற்சாலையில் மாதிரி ஓட்டம் நடத்தியதில், ஊக்கமளிப்பதாக இருக்கிறது. இத்தொழிற்சாலை நாளொன்றுக்கு ஒரு டன் நீர் அபிரகப்பட்டை தயாரிக்குமளவிற்கு தற்போது முடுக்கிவிடப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: இதை விற்பதன் காரணமாக நமக்கு உத்தேசமாக எவ்வளவு வருமானம் வரும் என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: உத்தேச வருமானம் எவ்வளவு என்ற விவரம் இல்லை. இது புதிய விதமான கண்டுபிடிப்பு—இதை எல்லோரும் ஏற்றுக்கொள்கிற அளவுக்கு வரவில்லை.